கிராமின் கிருஷி மவுசம் சேவா
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 19-12-2023**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-12-19 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-12-20 | 2023-12-21 | 2023-12-22 | 2023-12-23 | 2023-12-24 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 25.0 | 2.0 | 7.0 | 0.0 | 2.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 28.0 | 27.0 | 26.0 | 26.0 | 27.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 24.0 | 23.0 | 22.0 | 23.0 | 24.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 80 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 60 | 50 | 50 | 60 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 20 | 14 | 16 | 16 | 18 |
| காற்றின் திசை (கோணம்) | 20 | 50 | 50 | 50 | 50 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 7 | 6 | 6 | 5 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

டிசம்பர் 20 முதல் 24 வரை இலேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 26.0°C - 28.0°C எனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்ப நிலை 22.0°C - 24.0°C. வேறுபாட்டிலும் இருக்கும். வானம் அடுத்த ஐந்து நாட்களுக்கு பொதுவான மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 16 முதல் 20 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

## பொது ஆலோசனை:

தொடர்ந்து மேக மூட்டத்துடன் கூடிய ஈரப்பதமான வானிலை நிலவுவதால் விவசாயிகள் மஞ்சள் மற்றும் ஊதா நிற ஒட்டும்பொறி அட்டை வைத்து சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டத்தையும் கண்காணிக்கவும்.

## குறுஞ்செய்தி :

மார்கழி பட்டத்தில் பயறுவகை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் அங்கீகரிக்கப்பட்ட நபரிடமிருந்து இருத்து விதைகள் வாங்குவதன் மூலம் விதை மூலம் பரவும் நோய்கள் மற்றும் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம்.

**பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:**

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| உளுந்து | சம்பா நெல் அறுவடை முடித்த பிறகு நெல் தரிசு உளுந்து சாகுபடி செயும் விவசாயிகள். நெல் தரிசுக்கேற்ற உளுந்து இரகங்களான எடிடீ 5, டிஎம்வி 1 (நெல் தரிசு) ADT 3 , VBN 9 தேர்வுர் செய்து விதைக்கவும். விதைகளை விதைக்கும் முன் உளுந்து விதைகளை கடினப்படுத்த 5 லிட்டர் சுத்தமான தண்ணீரில் 0.5 கிராம் துத்தநாகசல்பேட் உப்பை கரைக்க வேண்டும். இதிலிருந்து 3.5 லிட்டர் எடுத்து ஒரு ஏக்கருக்கு தேவையான விதையை 3 மணி நேரம் ஊறவைத்து பின்னர் ஆறு மணி நேரம் நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும். |
| நிலக்கடலை | மார்கழிப்பட்டம் (டிசம்பர்- ஜனவரி) நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள். புதுக்கோட்டை மாவட்டத்திற்கு ஏற்ற இரகங்களான TMV 7, CO 3, CO 4, VRI 2, VRI 3, ALR 3, VRI 5, VRI 6, TMV 13 தேர்வுர் செய்து விதைக்கவும். விதை களை விதைக்கும் முன் தண்டழுகல் நோய் வராமல் தடுக்க விதையை டிரைகோடெர்மார் விரிடி 4 கிராம்/கிலோ (அ) சூடோமோனாஸ் 10 கிராம்/கிலோ என்ற அளவில் விதை நேர்த்தி செய்யலாம். |
| நெல் | சம்பா நெல் பயிரில் இலை மடக்குப்புழு தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. இதனை கட்டுப்படுத்த புரபனோபாஸ் 50 EC ஏக்கருக்கு 400 மில்லி வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கவும். |

**உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:**

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | தற்போது நிலவும் பருவ சூழ்நிலையில் கன்றுகளுக்கு மாதம் ஒருமுறை முறையாக குடற்புழு நீக்க மருந்தை அளித்தல் வேண்டும்.சாணத்தை பரிசோதித்து உரிய குடற்புழு நீக்க மருந்து அளிப்பதால் குடற்புழுக்கள் நீக்கப்பட்டு கன்று உட்கொட்ள்ளும் தீவனம் முழுமையாக உட்கிரகிக்கப்பட்டு கன்றின் துரிதவளர்ச்சி, விரைவில் பருவமடைதல், உடல் எடைபெருக்கம் ஆகியவற்றிற்கு உதவுகிறது. மேலும் அவ்வப்போது உடல் எடையைப் பரிசோதிக்க வேண்டும். |
| பசு | கடந்த வாரத்தில் நிலவிய வானிலை மற்றும் அடுத்த ஐந்து நாட்கள் எதிர்பார்க்கும் வானிலையில் காற்றின் ஈரப்பதம் அதிகமாக உள்ள காரணத்தால் இளம் கன்றுகள் மற்றும் ஆட்டுட்குட்டிகளை சுலபமாக இரத்தக்கழிச்சல் நோய் தாக்கூடிய வாய்ப்புள்ளதால் தகுந்த முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |